**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 608/2022 |
| Deposition of witness for Prosecution | : | P.W – 1 |
| Name | : | லால்பகதூர் கென்னடி, வயது 57 |
| Father Name/Husband Name | : | மாசிலாமணி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | தலைமை ஆசிரியர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of March 2023.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து எட்டையாபுரம் தமிழ்பாப்பிஸ்த் துவக்கப்பள்ளில் தலைமை ஆசிரியராக பணியில் உள்ளேன். எதிரி அகஸ்டினை எனக்கு தெரியும் அவர் கோவில்பட்டி தமிழ்பாப்பிஸ்த் பள்ளிக்கூட்டமைப்பில் உறுப்பினராக இருந்தார் நானும் அதில் உறுப்பினராக இருந்தேன்.
2. என்னுடைய மனைவி வாசுகி அவரும் தலைமை ஆசிரியராக பணியில் உள்ளார். கடந்த 14.04.2015 ஆம் தேதி தமிழ்பாப்பிஸ்த் பள்ளிக்கூட்டமைப்பின் செயலாளர் சஞ்சீவி டேவிட் இறந்துவிட்டார். அப்போது புதிய பொறுப்பாளர் தேர்வு செய்ய வேண்டி அங்கு வைத்து பேசிய போது எதிரி அகஸ்டின் என்னையும் எனது அம்மாவையும் உறுப்பினர்கள் இல்லை என்றும் உங்களை நீக்கிவிட்டதாகவும் சொன்னார்.
3. அது சம்பந்தமாக கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S No.86/2015 ல் வழக்கு தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கில் என்னையும் எனது அம்மாவையும் நீக்கியது செல்லாது என்று இடைக்கால தடை உத்தரவு பெற்றோம். புதிதாக சேர்க்கப்பட்ட 3 உறுப்பினர்களின் சேர்க்கையும் செல்லாது என்றும் தடை உத்தரவு வாங்கினோம்.
4. அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான நிர்வாகக்குழு பதிவு செய்யப்படவில்லை. சஞ்சீவி டேவிட் இறந்த மறுநாள் 15.04.2015 ஆம் தேதி பொதுக்குழு கூட்டப்பட்டு பொறுப்பாளர் தேர்ந்து எடுக்கப்பட்டு அதனை பதிவு செய்ய மாவட்ட பதிவாளரிடம் எதிரி பதிவதற்கு கொடுத்துள்ளார். நாங்கள் தடை உத்தரவு வாங்கியதால் அது பதிவு செய்ததது ஏற்றுக்கொள்ளவில்லை.

5. அதன் பின்னர் மேற்படி வழக்கின் இறுதி தீர்ப்பு 31.05.2018 ஆம் தேதி இறுதி தீர்ப்பு வந்தது. மேற்படி இறுதி தீர்ப்பும் இடைக்கால தீர்ப்பில் சொன்ன உத்தரவு தான் வந்தது. 04.08.2018 ல் எனக்கும் எனது அம்மாவிற்கும் எதிரியிடம் இருந்து ஒரு தபால் வந்தது. அதில் அனுப்புனர் பெறுனர் மற்றும் கையொப்பம் இல்லை. அதில் பிரசிடண்ட் சீல் மட்டும் இருந்தது.
6. இது சம்பந்தமாக நான் காவல்துறையில் புகார் அளித்தோம். மேற்படி புகாரில் நடவடிக்கை எடுக்காததால் குற்றவியல் நீதிமன்றத்தில் மனு செய்து CRLMP No.10830 ன் படி நீதிமன்ற உத்தரவின் வழக்கு பதிவு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் பிரிவு 156(3) ன் கீழான மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த மனு அ.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**) வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. எதிரி ஆஜர் இல்லை வழக்கறிஞர் ஆஜர். குறுக்குவிசாரணை இல்லை என்று சொல்லப்பட்டதால் குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை.**

| |
|---|
| Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.<br>Sd/ Tr. M. Kadarkarai Selvam<br>Judicial Magistrate No.I,<br>Kovilpatti. |